# மாதத் தேர்வு அக்டோபர் - 2024

பத்தாம் வகுப்பு

நேரம் : 45 நிமிடம் தமிழ் மதிப்பெண்கள் : 25

## பகுதி – I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **4 x1 = 4**

1. தமிழனத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ________
(அ) திருக்குறள் (ஆ) புறநானூறு (இ) கம்பராமாயணம்
(ஈ) சிலப்பதிகாரம்
2. 'கோப்பரகேசரி' என்று அழைக்கப்பட்ட மன்னன் __________
அ) முதலாம் இராசராச சோழன் (ஆ) கரிகாற் சோழன்
(இ) இரண்டாம் இராசராக சோழன் (ஈ) மனுநீதிச் சோழன்
3. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.
அ) உழவு, மண், ஏர், மாடு (ஆ) மண், மாடு, ஏர், உழவு
இ) உழவு, ஏர், மண், மாடு (ஈ) ஏர், உழவு, மாடு, மண்
4. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் __
அ) நாட்டைக் கைப்பற்றல் (ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் (ஈ) கோட்டையை முற்றுகையிடல்

## பகுதி – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** **5 x 2 =10**

5. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
6. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.
7. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.
8. கலைச்சொல் தருக.
அ) Patent (ஆ) Irrigation
9. மரூஉச்சொல்லை எழுதுக.
அ) புதுக்கோட்டை (ஆ) புதுச்சேரி
10. பகுபத உறுப்பிலக்கணம் தருக
மயங்கிய

## பகுதி – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க (13 ஆவது வினா கட்டாய வினா)** **2 x 3 = 6**

11. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாகக் கு.ப.ரா. கவிபாடுகிறார்?
12. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" –
இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
13. 'தூசும் துகிரும்' எனத் தொடங்கும் சிலப்பதிகார வரிகளை அடிபிறழாமல் எழுதுக.

## பகுதி – 4

**ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விரிவான விடையளிக்க.** **1 x 5 = 5**

14. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்திய பாடலின் நயத்தை விளக்குக.

(அல்லது)

நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

www.Padasalai.Net